# ஒரு மேலான சமுதாயத்தின் கீழான நிலை

ஷம்ஷுல்ஹுதா
(முன்னாள் பெயர் : செங்கதிர்ச் செல்வன்)

தமிழ்நாட்டில் உள்ள மிகவும் பின்தங்கிய சிற்றூர் ஒன்றில் ஹரிஜனக் குடும்பத்தில் பிறந்தவன் நான். எனக்கு விபரமறியும் பருவம் வந்ததும் நான் பல்வேறு மதங்களைப் பற்றியும் அறிவதில் ஆர்வம் கொண்டேன். என்னுடைய இந்து மதம் என்னால் புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு, குழப்பங்களின் மொத்த உருவமாகவே எனக்குத் தென்படுகின்றது. கடவுள் கொள்கை தான் மதங்களுக்குக்கெல்லாம் தலையாய கொள்கையாகும். இந்து மதத்தில் கடவுள் கொள்கை என்ன என்று பார்ப்போமானால் தலை தான் சுற்றுகிறது. **“ஒன்றேகுலம் ஒருவனே தேவன்”** என்ற முழக்கம் ஒருபுறம். இதன்படி ஒரே தெய்வத்தை நம்புபவரும் இந்துதான். மூன்று கடவுள்கள் உண்டு எனக்கூறி அவைகளை வழிபடுவதும் இந்துதான், பல இலட்சக் கணக்கான தெய்வங்களின் மீது நம்பிக்கை கொள்பவரும் இந்துதான். கடவுளே இல்லை என்று சொல்லும் நாத்திகர்களும், கூடத் தங்களை இந்துக்கள் என்றே கூறிக்கொள்கிறார்கள்.

தெய்வக் கொள்கையால் இப்படிப்பட்ட குழப்படிகள் ஏராளம் ஏராளம். அடுத்து **‘ஒன்றே குலம்’** என்று அவர்கள் சொல்கிற கூற்றையும் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம். இந்துக்களின் பழம் பெரும் வேதமாகிய யஜுர் வேதம் சொல்கிறது. **“ஈசுவரனுடைய முகத்திலிருந்து பிராமணர்களும், புயங்களிலிருந்து சத்திரியர்களும் தொடைகளிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிருந்து சூத்திரர்களும் முறையே உண்டாயினர்”** (யஜுர் 30:11). ஆக, வேதவாக்கியங்களே மனிதனைப் பிறப்பினடிப்படையில் நான்கு சாதிகளாகப் பகுத்துக் காட்டுகிறது. இந்துக்களிட மிருக்கும் எண்ணிலடங்காத தெய்வங்களைப் போலவே, மனிதகுலத்தில் இந்துக்களிடையே எண்ணிலடங்காத சாதிப்பாகுபாடுகளும் நிலவி வருகின்றன.

உயர்ந்த சாதிக்காரர்களால் தாழ்ந்த சாதிக்காரர்கள் எனக்கருதப் பட்ட நாங்கள், நாயைவிடக் கேவலமாக நடத்தப் படுகின்றோம். இதை எல்லாம் கண்டு வெறுப்படைந்தேன் நான். வீண் பொருள் செலவுக்கு வழிவகுக்கின்ற இந்துக் களின் முட்டாள்தனமான சடங்கு சம்பிரதாயங்கள் வேறு

அம்மதத்தின் மீது மேலும் வெறுப்படையச் செய்தன. இந்தநிலையில் நான் பிற மதங்களைப் பற்றியும் சிறிது சிந்திக்கலானேன்.

இஸ்லாம் பற்றி நான் மேலோட்டமாகத் தெரிந்தபோது அதைப் பற்றி இன்னும் மிகுதியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு அதிகரித்தது. இஸ்லாத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குத் அல்குர்ஆனையும், முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையையும் தெரிந்து கொண்டால் போதுமானது என அறியலானேன். குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களைப் படித்துப் படித்து, அதன் உலகளாவிய கருத்துக்களை அறிந்து வியப்படைந்தேன்.

மனிதனுடைய பகுத்தறிவுக்கு ஏற்ற ஒரு தெள்ளத் தெளிவான வாழ்க்கைத் திட்டமே இஸ்லாம் என்பதைச் ஐயத்துக்கிடமின்றித் தெரிந்து கொண்டேன். “**நிச்சயமாக அல்லாஹ்வினிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம் தான்**” **(3:19)** எனத் அல்குர்ஆன் கூறும் வசனம் எனக்கு முழுக்க முழுக்கச் சரியாக்கப்பட்டது. எனவே தான் நன்கு ஆராய்ந்து அறிந்து தெரிந்து உணர்ந்து, கலிமா உரைத்து முஸ்லிமாக ஆனேன். அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கைதான் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உயிர்க் கொள்கையாக இருக்க வேண்டும். ஏக அல்லாஹ்வுக்கு உள்ளச்சத்துடன் கட்டுப்பட்டு, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றி வாழ்பவர்தான் மெய்யான முஸ்லிம் ஆவார்.

“**உங்களிடம் இரண்டு பொருட்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் பற்றியொழுகும் வரை நீங்கள் நிச்சயம் வழி தவறமாட்டீர்கள் ஐனு அல்லாஹ்வின் நெறிநூல்; மற்றொன்று அல்லாஹ்வின் தூதருடைய வழிமுறை**” என நபி(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக மாலிக் இப்னு அனஸ்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

*நூல் : முஅத்தா*

அல்குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டின் அடிப்படையில் தான். முஸ்லிம்களின் வாழ்க்கை இருக்கும் என எண்ணியிருந்தேன். நான் இஸ்லாத்துக்குள்ளே வந்த பின்புதான் பல்வேறு தரப்பட்ட முஸ்லிம்களுடன் கலந்து பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இஸ்லாத்தை பற்றித் அல்குர்ஆனிலும்,

ஹதீஸிலும் படித்து அறிந்ததற்கும் முஸ்லிம்களுடைய நடை முறை வாழ்க்கைக்குமிடையே எத்தனையோ வேறுபாடு களை நான் காணத் தொடங்கினேன்.

முதலாவதாகப் பார்ப்போ மானால், இஸ்லாத்தின் உயிர்க் கொள்கை என வானளாவப் போற்றப்படுகின்ற ஓரிறைக் கொள்கையே, பெரும்பான்மை முஸ்லிம்களுடைய வாழ்க்கை யில் ஒட்டை விழுந்து கிடப்பதைக் காணலாம்.

**நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவர்களை அவர்கள் (ஆண்டவர்களென) அழைக்கின்றார்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே! (உங்கள் கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள் என்று கூறுவதில்) நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால், அவர்களை நீங்கள் அழைத்துப் பாருங்கள்; உங்களுக்கு அவர்கள் பதிலளிக்கட்டும்.**

**அவைகளுக்கு நடப்பதற்குரிய கால்கள் இருக்கின்ற னவா? அல்லது அவைகளுக்குப் பார்ப்பதற்குரிய கண்கள் உண்டா? அல்லது அவைகளுக்குக் கேட்பதற்குரிய காதுகள் உண்டா? (அல்லாஹ்வுடன்) நீங்கள் இணை வைத்து வழங்கும் தெய்வங்களை (துணைக்கு) அழைத்துக்கொண்டு நம்மிடம் சூழ்ச்சி செய்து பாருங்கள். இதில் சிறிதும் தாமதிக்க வேண்டாம் என்று நபியே நீர் கூறுவீராக.**

**உறுதியாக என்னைக் காப்பவன் அல்லாஹ்தான். அவனே இந்நெறிநூலை அருள் புரிந்தான். அவன் நல்லடியார் களைக் காப்பவனாகவும் இருக்கிறான்.**

**ஆகவே அல்லாஹ்வையன்றி, எவற்றை நீங்கள் அழைக்கின்றீர்களோ அவை உங்களுக்கு எத்தகைய உதவியும் செய்ய சக்தி யற்றவையா யிருக்கின்றன. நீங்கள் அவைகளை நேரான பாதையில் அழைத்த போதிலும் அவை செவியுறா. (நபியே) அவை உம்மைப் பார்ப்பதைப் போல உமக்குத் தோன்றுகிறது. உண்மையில் அவை உம்மைப் பார்ப்பதே இல்லை.** ***அல்குர்ஆன் 7:194-198***

அல்குர்ஆன் இப்படிச் சொல்கிறது. ஆனால் நான் பார்க்கும் முஸ்லிம்களோ அல்லாஹ்வை அன்றி யார் யாரை எல்லாமோ அழைத்து உதவி தேடுவதை ஊர்தோறும் பார்க்கிறேன். இறந்து போன நல்லடியார்கள், தங்களது கஷ்ட, நஷ்டங்களைத் தீர்த்து வைப்பவர்கள் எனக் கருதி, 'யா **முஹையத்தீன்**' என்றும் 'யா **ஷாஹுல் ஹமீது**' என்றும் 'யா **அஜ்மீர் காஜா**' என்றும் கூப்பிட்டு உதவி கேட்பவர்கள் ஏராளம்,

ஏராளம். இவர்களே நேரடியாக உதவி புரிவார்கள் என நம்பு கிறது ஒரு கூட்டம். அல்லாஹ்வின் அருளைப் பெற்றுத்தரு வதற்கு அவர்களின் உதவியை நாடுகிறோம் என நொண்டிச் சாக்கு சொல்கிறது இன்னொரு கூட்டம். எப்படியோ, அல்லாஹ் அல்லாத இந்த நல்லடியார்கள் உதவிக்காக அழைக்கப்படு கிறார்கள் என்பது கண்கூடு.

இறந்துபோன இந்த அடியார்களைக் கூப்பிடுவதற்காக அரபியில் புனையப்பட்டுள்ள கவிதைகளும் நிறைய உள்ளன. இந்தக் கவிதை நூல்களுக்குப் பல ஊர்களில் குர்ஆனைவிடப் பெரிய மரியாதை கொடுக்கப்படுகிறது. ஹஜரத்துமார்களும்ஆசஇ லெப்பைமார்களும்ஆசஇ கூடி இவைகளை பக்திப் பரவசத்தோடு ஓதுவதும் அதற்காகப் பெரும் பொருள் செலவில் ஏற்பாடுகள் செய்வதும் முஸ்லிம்களிடம் சர்வ சாதாரணமாகக் காணப் படுகிறது.

இந்த இறந்துபோன அடியார்களுக்காக நேர்ச்சைகள் செய்யப்படுகின்றன. அறுத்துப் பலி கொடுக்கும் செயல்கள் நடத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆலிம் சாஹிபுகள் முன் நின்று நடத்துகிறார்கள்.

இந்துக்களின் வாழ்க்கை முறைகளுக்கும் முஸ்லிம்கள் எனச்சொல்லிக் கொள்ளும் இவர்களுடைய வாழ்க்கை நடைமுறைக்கும் அவ்வளவாக ஒன்றும் வேறுபாட்டைக் காண முடியவில்லை. காசி, சபரிமலை, பழநி, திருச்செந்தூர் முதலிய இடங்களுக்கு பயணம் செல்லும் இந்துக்களைப் போலவே முஸ்லிம்களும் அஜ்மீர், நா ர், முத்துப்பேட்டை, ஏர்வாடி எனப் பயணம் செய்கிறார்கள்.

மஸ்ஜிதுல் ஹராம், மஸ்துந் நபவீ, பைத்துல் முகத்தஸ் ஆகிய மூன்று இடங்களைத் தவிர வேறு எங்கும் நிய்யத்து வைத்துப் பயணம் மேற்கொள்ளக் கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். நபிவழியே நம் வழி என வாயால் சொல்லிக்கொள்ளும் நம் முஸ்லிம்களோ, அதற்கு நேர்மாறாகச் செயல்படுகின்றார்கள்.

மாயாண்டி துணை, கருப்பாயி துணை, கணபதி துணை, கருப்பசாமி துணை என்றெல்லாம் ஏகப்பட்ட சிறு தெய்வங்களைத் துணைக்கு அழைக்கிறார்கள் இந்துக்கள். சிக்கந்தர் அவுலியா துணை, நாகூர் ஆண்டவர் துணை, முஹ்யித்தீன் ஆண்டவர் துணை, ஆத்தங்கரை நாச்சியார் துணை எனப் போர்டு மாட்டிக்கொண்டு எத்தனையோ முஸ்லிம் லாரிச் சொந்தக்காரர்கள் இங்கேயும் இருக்கிறார்கள்.

அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நேர்ச்சை செய்யக்கூடாது என்று அல்லாஹ்வே சொல்கிறான். ஆனால் முஸ்லிம்களோ அல்லாஹ்வைத் தவிர யார் யாருக் கெல்லாமோ நேர்ச்சை செய்கிறார்கள்.

**"எவன் அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யாக்கி அவற்றிலிருந்து விலகிக் கொள்கிறானோ அவனைவிட அக்கிரமக்காரன் யார்" (6:157)** என்ற குர்ஆன் வசனப்படி பார்ப்போமானால், முஸ்லிம்கள் எனச் சொல்லிக்கொள்ளும் இவர்களே முதல் அக்கிரமக்காரர்களாகவும் இருத்தலைக் காணலாம்.

முஸ்லிம்களுடைய வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு செயலிலும் இந்துக்களின் வாழ்க்கை முறைகள்தான் காணக் கிடக்கின்றன. குழந்தை பிறப்பதற்காக இந்துக்கள் அரச மரத்தையும் ஆலமரத்தையும் சிலைகளையும் வலம் வருவதுபோல முஸ்லிம் தாய்மார்கள் கபுருகளை வலம் வருகிறார்கள். அங்குள்ள சாம்பிராணிச் சாம்பலையும் காய்ந்த பூவையும் பிரசாதமாகப் பெற்று உண்ணுகிறார்கள்.

பிள்ளை பிறந்தவுடன் நேர்ச்சையை நிறைவேற்றுவதற் காக இந்துக்கள் சின்ன தொட்டில்களைப் போல் செய்து கோவில்களில் தொங்க விடுவார்கள். முஸ்லிம்களோ பூந்தொட் டில்களை தர்ஹாக்களில் தொங்க விடுகிறார்கள்.

குழந்தை பிறந்ததும் நாள், நட்சத்திரம் எல்லாம் குறிக் கப்பிடுகின்றன. ஜாதகம் கணிக்கப்படுகிறது. பிள்ளைக்குப் பெயர் சூட்டவும், தலைமுடி இறக்கவும் இந்துக்கள் கோவிலுக் குப் போகிறார்கள் முஸ்லிம்கள் தர்ஹாவுக்குச் செல்கிறார்கள்.

இந்துக்களில் சில பிரிவினர் ஆண் பிள்ளைகளுக்கு உபநயன விழா என்னும் பூநூல் திருமணத்தை மிக விரிவாகக் கொண்டாடுகிறார்கள். அது போல முஸ்லிம்களும் அழைப் பிதழ் அச்சடித்து பந்தல் ஒலிபெருக்கி எல்லாம் வைத்துச் சுன்னத்துத் திருமணம் செய்கிறார்கள். இது போலப் பெண் குழந்தைகளுக்குக் 'காதுகுத்து விழா' போன்றும் 'பூப்பு நீராட்டு விழா' என்றும் எல்லா இடத்திலும் வேறுபாடின்றி நடக்கிறது. பெண் பருவமடைந்ததை எந்த அளவுக்கு நாகரிகமாக வைத்துக்கொள்ள வேண்டுமோ, அதை விட்டுவிட்டுப் பகுத்தறிவு மார்க்கமாகிய இஸ்லாத்தில் வந்தவர்கள் நாங்கள் என்று சொல்லிக்கொள்ளும் முஸ்லிம்கள் இதை ஒரு குட் டித் திருமண விழாவாகவே கொண்டாடுகின்றார்கள்.

மஹர் கொடுத்து நிகாஹ் நடத்த வேண்டும் என்று குர்ஆன் கூறுகிறது. ஆனால் இங்கே நடப்பதோ வேறு திருமண உறுதி என ஒரு சடங்கு. ஆலிம் சாக்களும் ஊர்ப் பெரியவர்களும் கூடியிருந்து ஜகூஆநு:ர்லஹஇ பேசி முடித்துவிட்டு மூக்கு முட்ட உண்டபின் ஒரு பாத்திஹா ஓதிப் பரவசமடைந்து போவார்கள். இந்துக்களின் திருமண உறுதிப்பாட்டுச் சீர்வரிசைகளைப் போலவே இங்கும் தாம்பூலங்களும் பாத்திரங்கள் பலகாரங்களும் பரிமாறப்படும்.

இந்துக்கள் தாலி கட்டுவது போல முஸ்லிம்களும் தாலி கட்டுகிறார்கள். நல்ல நாள் பார்த்தல், ஆரத்தி எடுத்தல், ராகுகாலம், எமகண்டம் பார்த்துச் செயல்படுதல் எல்லாம் அங்கும் இங்கும் ஒன்று போலவே இருக்கின்றன.

பஞ்சாங்கம் பார்ப்பது, பில்லி சூனியம் பார்ப்பது போன்ற மூட நம்பிக்கைகள் முஸ்லிம்களிடமும் உள்ளன. “**ஃபால் பார்த்தல்**” என்னும் ஒரு நூதனமான சகுனம் பார்க்கும் செயலையும் இங்குக் காணமுடிகிறது.

வீடு கட்டுவதற்காகக் கடைக்கால் தோண்டும்போது, கதவு நிலைகள் நாட்டும்போது இந்துக்கள் செய்கிற சடங்குகளை, இவர்களும் தவறாமல் செய்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால் ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடும், எனவும் வலுவான ஈமான் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வுக்காகக் கட்டப்படும் மஸ்ஜிது கட்டடப்பணிகளில் கூட, மூட நம்பிக்கை கொண்ட நிர்வாகிகளால் இவை நிறைவேற்றப் படுகின்றன.

வீடு குடி புகுவதற்குமுன் ‘**தச்சுகழித்தல்**’ என ஒரு சடங்கு பல பகுதிகளில் இந்துக்களிடமும் முஸ்லிம்களிடமும் ஒன்று போலவே காணப்படுகிறது. வீடு குடிபுகும் நிகழ்ச்சியைப் புதுமனை புகுதல் என இந்துக்கள் கொண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் பால் காய்ச்சு விழா என விரிவாகக் கொண்டாடுகிறார்கள்.

கெட்ட தேவதைகள், சாத்தான்களின் பிடியிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காகத் தாயத்து, மந்திரக்கயிறு, காசு முடிந்து கட்டுதல் போன்ற செயல்கள் இந்துக்களிடமும் முஸ்லிம்களிடமும் ஒன்றுபோல நடக்கின்றன. இந்துக்களின் வீடு, கடைகளில் செம்புத் தகடுகளில் மந்திரம் எழுதித் தொங்கவிடுவதைப் போல முஸ்லிம்களின் வீடு, கடைகளிலும் தொங்கவிடப்படுகின்றன. பாட்டில்களில் தகடுகளை அடைத்து வீட்டின் மூலைகளில் உயரே தொங்கவிடுவதையும் இருதரப்பிலும் காணலாம்.

வீட்டிலிருந்து வெளியே புறப்படும்போது எதிர்த்தாற் போல் வருவதற்காக ஒருவரை நிறுத்திப் புறப்படுவது, பக்கா முஸ்லிம்களிடம் இன்றும் காணப்படுகிறது.

இந்துக்களுடைய கோவில் திருவிழாக்களுக்கும் முஸ்லிம்களுடைய தர்ஹா உரூஸ்களுக்குமிடையே எந்த வேறுபாட்டையும் காண முடியவில்லை. அங்கே கொடியேற்றம்; இங்கேயும் கொடியேற்றம். அங்கேயும் இங்கேயும் உண்டியல், ஊர்வலம், யானை, குதிரை ஊர்வலங்கள், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம். அங்கே தெய்வத்துக்குப் பால் முழுக்கு இங்கே கபுருக்குச் சந்தன முழுக்கு அபிஷேகம். அங்கே தேரோட்டம் இங்கே கப்பலோட்டம். சந்தனக்கூடு களின் சுந்தர பவனி, பாட்டுக் கச்சேரிகளுக்குப் பஞ்சமே இல்லை. ஆணும், பெண்ணும் ஒட்டி உரசிக்கொண்டு உலாத்துகின்றனர். கோவில் பிரசாதம் பார்சலில் அனுப்பப்படுவதுபோல தர்ஹா பிரசாதமும் காணிக்கை செலுத்திய பக்தர்களுக்குப் பார்சல் செய்யப்படுகிறது. அங்கே பூசாரிகள் இங்கே ஹஜரத்துமார்கள்.ஆசஇ

கோவில் விழாக்களில் புராண இதிகாசங்களைப் பாடுவார்கள். தர்ஹா உரூஸ்களிலும் ஏதேதோ மாலைகளும் முனாஜாத்துக்களும் புராணங்களும் பக்தி சிரத்தையோடு பாடப்படுகின்றன.

இறந்தவரை எடுத்துச்செல்லும் சந்தூக்குப் பெட்டியில் பூப்போடுவது, கபுரில் பூமாலை வைப்பது, ஊதுபத்தி கொளுத் துவது, இறுதிச் சடங்கு நிறைவேற்றிய கையோடு ஆடு அல்லது கோழி அறுத்துச் சமைத்து உண்பது ஆகிய பழக்கங் கள் இந்துக்களிடமும், முஸ்லிம்களிடமும் ஒன்று போலவே காணப்படுகின்றன. இந்துக்கள் 16-ஆம் நாள் அடியந்தரம் என்றும் வருஷதிதி என்றும் கொண்டாடுகிறார்கள். முஸ்லிம் கள் 3ஆம், 4ஆம் நாள், நாற்பதாம் நாள், ஆண்டு நிறைவு என்றெல்லாம் கொண்டாடுகின்றார்கள்.

கணவன் இறந்ததும் மனைவி தாலியறுப்பது, விதவைக்கோலம் பூணுவது போன்ற சடங்குகள் முஸ்லிம் களிடமும் உண்டு. ஆகப் பிறப்பிலிருந்து இறப்புவரையுள்ள முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை மேலோட்டமாகப் பார்க்கும்போது கூட, அவர்களுக்கும் இந்துக்களுக்கும் வேற்றுமை அதிகமில்லை என்பதைத்தான் தெரிய முடிகிறது.

முஸ்லிம்கள் ஒருமை நெறியிலிருந்து தடம் புரண்டு சென்றதையே இந்தச் செயல்களெல்லாம் காட்டுகின்றன. கலிமா சொன்ன முஸ்லிம்கள் நாங்கள், எனச் சொல்லிக் கொள்ளும் இவர்களிடையேயும், இந்துக்களிடமுள்ள இனப் பாகுபாடு போலப் பிரிவுகளும் உள்ளன. குர்ஆனிலும், ஹதீஸிலும் அங்கீகார மில்லாத நிலையில் இவர்கள் மனிதர் களை ஷாஃபி, ஹனபி, மாலிக்கி, ஹம்பலி என மத்ஹபு அடிப்படையில் கூறுபடுத்தி வைத்துள்ளார்கள். அவர்களுக் கெனத் தனிப்பள்ளி வாசல்களும் உள்ளன. இன்னும் தரீக்காக் கள் என்ற பெயரால் காதிரியா தரீகாவினர் என்றும் ஷாதுலியா தரீகாவினர் என்றும் பிரிந்து நின்று ஒருவரோடு ஒருவர் கை கலப்பு செய்து கொள்ளும் காட்சிகளும் உண்டு.

**“எவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பிரித்துப் பல பிரிவினராகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் உமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய விஷய மெல்லாம் அல்லாஹ்வினிடமே இருக்கிறது. அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றிப் பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்.” (6:159)** என்ற குர்ஆன் வசனத்தைப் பற்றியும் இந்த முஸ்லிம்களுக்குக் கவலை இல்லை.

குர்ஆனையும் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முன் மாதிரியையும் பின்பற்றி நேர் வழி வாழ்வதுதான் ‘ஷரீஅத்’ ஆகும். இதன்படி எவரொருவர் பிறழாது வாழ்கிறாரோ அவர் அல்லாஹ்வின் நல்லடியாராக, நபி(ஸல்) அவர்களின் அழகிய உம்மத்தாக இம்மையிலும் மறுமையிலும் திகழுவார். ஆனால் இதிலே கூட முஸ்லிம்கள் நான்கு பேதங்களை உண்டு பண்ணிவிட்டார்கள் இந்துக்களிடம் வழங்கப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பிரிவுகளைப் பின்பற்றி, ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் என நான்கு விதமான வாழ்க்கைப் படித்தரங்களை முஸ்லிம்களும் ஏற்படுத்தி விட்டார்கள். இதற்கெல்லாம் குர்ஆனிலோ, ஹதீஸிலோ எந்த ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களைப் போலக் கோவணம் அணிந்து கஞ்சா அபின் அருந்தி மலை யடிவாரங்களிலும், காடுகளிலும் உலவிய முஸ்லிம் துறவிகள் மாபெரும் ஸூஃபிகளாகப் போற்றப்படுகின்றனர். மோனச, நிஷ்டை, நிர்வாணம் போன்ற இந்துக் கோட்பாடுகளுக்கு ஸூபிசுச் சாயம் பூசி அதையும் இஸ்லாம் போல் காட்டி வருகின்றனர்.

இன்றைய தமிழக முஸ்லிம்களின் பல தலைமுறைக்கு முன் வாழ்ந்தவர்கள் இந்துக்களாகவே இருந்திருப்பவர்கள். அந்த இந்து மூதாதையர்களின் பழக்க வழக்கங்களும், வணக்க வழிபாடுகளும், சடங்கு வழக்கங்களும், இன்றைய முஸ்லிம் களின் வாழ்க்கை முறையிலிருந்தும் வணக்க வழிபாடுகளிலி ருந்தும் முற்றாக விடுபடவில்லை. இன்றைய தமிழக முஸ்லிம்கள் முந்தைய இந்து மூதாதையர்களின் செயல்களைச் செய்துவிட்டு, அதற்கு இஸ்லாமியப் போர்வையைப் போர்த்துகின்றார்கள். செய்வதை யெல்லாம் செய்து விட்டு ஒரு பாத்திஹா சொல்லி ஒரு துஆவையும் ஓதி இஸ்லாமியச் சடங்குபோல் காட்சியளிக்க வைத்து விடுகிறார்கள். அல்லாஹ்வுடையவும், நபி(ஸல்) அவர் களுடையவும் வழிமுறைகளை விட்டு விட்டு மூதாதையர்களின் வழியைப் பின்பற்றுபவர்களை அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் கண்டித்துள்ளான் (2:170, 5:104, 10:78, 11:62, 26:74, 31:21, 34:43, 43:22).

இப்படியெல்லாம் இருந்துங்கூட இன்றைய முஸ்லிம்கள் மூதாதையர்களின் மூடப்பழக்கங்களிலிருந்து இன்னமும் விலகிக் கொள்ளாமலே இருக்கிறார்கள். ஒருமுறை இந்திய அரசியல் சாரனச் சட்டம் வகுத்த டாக்டர் அம்பேத்கார் இந்தியா முழுவதுமுள்ள ஹரிஜனங்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு இஸ்லாத்தில் சேருவது என முடிவெடுத்தார். இந்த முடிவுடன் அவர் முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை நோட்டமிட்டபோது இங்கேயும் மத்ஹபுப் பிரிவுகள், தரீக்காச் சண்டைகள், மூட நம்பிக்கைகள் முதலிய, மலிந்து கிடப்பதைக் கண்டு மனம் வெதும்பி, அந்த எண்ணத்தைக் கைவிட்டார்.

ஆக அம்பேத்கார் கண்ட இந்த முஸ்லிம் சமுதாயத்தின் குறைபாடுகள் இன்னும் அப்படியே இருப்பதைத்தான் நானும் காண்கிறேன். புதிதாக இஸ்லாத்துக்கு வந்த என்னைப் போன்றவர்களுடைய இந்த ஆதங்கம் பரம்பரை முஸ்லிம்களுக்கு ஏற்பட வேண்டுமே எனக்கவலை கொள்கிறேன்.

**“நீங்கள்தான் மேலான சமுதாயத்தவர்கள்”** (3:110) என்று அல்லாஹ்வால் குறிப்பிடப்பட்ட இந்த முஸ்லிம் சமுதாயம் அதற்குரிய நிலையைப் பெறாமல், கீழான நிலையில் வாழ்கிறது என்றால் அதற்குக் காரணம் இச்சமுதாயம் குர்ஆன், ஹதீஸிலிருந்து விலகிச் சென்றதே யாகும். இந்துக்களைப் பின்பற்றி வாழும் இச்சமுதாயம் அதையெல்லாம் துணிந்து ஒதுக்கிவிட்டு, குர்ஆன், ஹதீஸைப் பின்பற்றி வாழ்ந்து உயர்நிலை யடைய அல்லாஹ்விடம் துஆ கேட்கின்றேன்.